𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ் மீ ௴ ௰.௨ தோறும் சிதம்பரத்திலிருந்து பிரசுரஞ் செய்யப்படும்.

வால்யூம்-௧] ௧௮௮௬ ௵ ஜனுவரிமீ ௴ ௨ | | புத்தகம்-௧] ௧௮௮௬ ௵ ஜூலைமீ ௴-௨. [இலக்கம்-௨

[illegible]

[illegible]

𑌸𑌾𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑌿𑌕𑌸𑍍𑌯	௩	௮
𑌷𑌾𑌣𑍍𑌮𑌾𑌸𑌿𑌕𑌸𑍍𑌯	௧	௰௨
𑌤𑍍𑌰𑍈𑌮𑌾𑌸𑌿𑌕𑌸𑍍𑌯		௰௪
𑌏𑌕𑌸𑍍𑌯𑌾𑌃 𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌯𑌾𑌃		௫

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾

[illegible] [[illegible]]

𑌋𑌗𑍍𑌵𑍇𑌦𑌃 𑌯𑌜𑍁𑌰𑍍𑌵𑍇𑌦𑌃 𑌸𑌾𑌮𑌵𑍇𑌦𑌃 𑌅𑌥𑌰𑍍𑌵𑌣𑌵𑍇𑌦𑌃 𑌇𑌤𑌿 𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑍋 [illegible] 𑌇𑌤𑌿, 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌤𑍍𑌰𑌯𑍀𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 [illegible]

சுபமஸ்து

சந்தா விவரம்

வருஷம்	1-இ	3	8	0
மாசம்	6-இ	1	12	0
ஷை	3-இ	0	14	0
காபி	1-இ	0	5	0

ப்ரம்மவித்தியா

ஸம்ஸ்கிருத பாஷை. (தொடர்ச்சி)

இருக்குவேதம், யஜுர்வேதம், அதர்வணவேதம் என நான்கு வேறுபாடுகள் உண்டு. அவைகளில் முதன்மை பெற்ற மூன்றனுள் மற்றொன்றும் சேர்ந்ததெனக்கொண்டு, இவ்வேதங்களை மூன்றின் தொகுதி எனப் பொருள்படும் (திரயீ) என்கிற பதத்தால் வழங்குவதுண்டு. அவ்வொவ்வொரு வேதமும் கன் [illegible] ப்புடைத்து. அங்

[illegible]

ரிதோவஷ்டிரஹ்மவீவ்ருதி

[illegible]

றி அக்கிரியையின் அங்கமாயும் முடிவுபெறும். பின்னர் அவ்விதி ெழாழிந்த கர்மத்தைப்புகழும் அர்த்தவாதம். அதுகொண்டு இவற்றுள் விதி முக்கியமாதல்பற்றிப் பிரமாணங்களிலும் முதன்மை பெற்றதே. மந்திரங்களும்கிரியைகளின் அங்கமாகையால் அவைகளும் அங்கியாகிய பொருளையுணர்த்தும் விதிவாக்கியங்களுக்கடுத்த பிரமாணமே. ஓரிடம் விதி ஓர் பொருளையுணர்த்த மந்திரம் மற்றொரு கிரியையின் அங்கமாய் நிற்குமெனப் பொருள்படின், விதிவாக்கியப்பொருளுடன் முரணுதவாறு மந்திரவாக்கியப் பொருள் கொள்வது உசிதம் என்பது. அர்த்தவாதங்களோ புகழ்வது தொழிலாய்ச் சொன்டனவாதலால் அவைகள் பொருள் நிலைமை சாட்டுவதும், அக்கிரியையின் அங்கமுமான விதி மந்திரங்களின் வேறாய், அதினுடன் முரணுதவாறு பொருள் கொடுக்கும் வல்லமை உடையன மூன்றும்பிரமாணங்களென நன்கு மீமாஞ்சை(வாக்கியங்களின் பொருளுரைக்கும்நூல்) கற்றவர் கூறுவர். அநேகம் அநேக வேற்றுமைகள் ஷெ நூலிற்காணலாம்.

இவற்றுள் இருக்குவேதம்சாகைகள்(ஒவ்வொரு பாகத்தின் பெயர்) இருபத்தொன்று கொண்டது. யஜுர் வேதம் ஒன்றுடன் நூறுபெற்றது. ஆயிரம் சாகைகள் பெற்றது அரிய சாமவேதம். ஒன்பது சாகைகளில் ஒழிந்தது அதர்வணம் என்று முனிவர் மணிகள் மொழிந்ததுகொண்டு முதியோர் வழங்குவது. இக்காலத்திலோ இரண்டு மூன்று சாகைகள் சாமத்திலும், யஜுர்வேதத்திலும், ஒன்றே இருக்குவேதத்திலும் வழங்கி வருகின்றன. அதர்வணத்தில் ஒரு சாகை வடநாடுகளில் வழங்கி வருகின்றது இவைகளும் ஆசிரியன் தொண்டுபுரியுந் திறமைபெற்றுத் தீர்க்ககாலம் ஜீவித்துவந்த முன்னோர்களால் நன்கு கற்கப்பட்டுவந்தன. பிறகு உலகங்களை அநுக்கிரகிக்கவே திருவுருவங்கொண்ட வேதவியாசமாமுனிவர் மனிதர் ஆயுள் குறையுமெனக்கருதி, அதற்கேற்ப வேதங்களைப் பிரித்து ஒவ்வொரு சாகைகளை ஒவ்வொருவர் கற்கச்செய்தது கொண்டு சிலர் இருக்குவேதிகளென்றும், சிலர் யஜுர்வேதிகளென்றும் வேறு சிலர் சாமவேதிகளெனவும், இன்னும் சிலர் அதர்வண வேதி[illegible]. அதுமுதலிதுகாறும்

[illegible]

ள்ள ஒரு அதிகாரி நிமித்தம் ஸ்மிருதிகள் என வழங்கும் தர்
ம நூற்களை இயற்றினர்.

இன்னும் வரும்.

சுபமஸ்து.

மதமும், அதின் பிரயோசனமும், அதின் ஆசிரியரும்.
(தொடர்ச்சி)

முற்காலத்திற் கலியுகாதி ௨௬. வருஷங்கள் சென்று மூன்
றாவது ஆயிரம் தொடங்கிய பொழுது, ஸ்ரீமத் விக்கிரமசகாப்
தம் தொடங்கி ௨௧-வது வருஷமாகிய ஈசுரவருஷத்தில், மு
ம்மூர்த்திகளையும் முதற் பிள்ளைகளாய்க் கொண்ட வத்திரிமகா
முனிவர் அருங்குலத்தில் (அதாவது ஆத்திரேய கோத்திரத்
தில்) மாறாது தொண்டுசெய்து மாதேவன் அருள்பெற்ற மறை
யோர்மணியாய ஸ்ரீமத் சிவகுரு என்பவர்க்கு ஓர் கிழ வடி
வங்கொண்டு முக்கட்பிரான் சொப்பனத்தில் வரமளித்தபடி,
சகல சற்குணங்களும் குடிகொள்ளும் ஓரிடமாய், உலகத்தில்
வாழும் உயர்குலத்தாருமிருக்குமிராசித் திருமகனைப் (இலக்ஷ்
மீபுத்திரன் அதாவது மன்மதன்) பழிக்குந் திருமேனிகொண்டு
மலையாளநாட்டின் பாசிலாமணியாய்க் காலடிக்கிராமத்தில் முற்
கூறியவந்தணரரசருக்கு ஓர் அருமைப்புதல்வர் அவதரித்தனர்.
அவரையே உலகத்தார் பகவத்பாதமுனிவர் என வழங்குவது
அவர் சிறுமையில் வெகுகாலம் மைந்தரில்லாது மனமுருகி
நின்ற தாய்தந்தையர் ஆனந்திக்க அருமையானபாலசேட்டை
களுடன் சிலகாலஞ் சென்றபிறகு சுவாமிகளுக்கு ௩-வதுவய
தில் ஸ்ரீமான் சிவகுரு என்னும் பிதா இம்மையிலுடலை விட்டு
மறுமையிற்சுகம்பெற மண்ணுலகைவிட்டு விண்ணுலகுக்கேக
த் தமது தாயடிகளைப் பற்றி, அவ்வக்காலங்களில் அந்தணர்க
ளுக்குரிய சடங்குகளை நிறைவேறப்பெற்று, ஐந்தாம்வயதில்
அரிய காயத்திரி மந்திரம்பெறும்படி இவரது பெருமையைக்
கண்டுகளித்த கல்விமான்களுரைக்க அவ்வாறே உபாயனம்பெ
ற்று, உயர்குலத்தார் ஒழுக்கத்தின்படி ஓர் ஆசாரியனிடம் வே
தங்கள் ஓதக் கருதி, அக்காலத்துக்குரிய பிக்ஷாடன விரதங்
கொண்டு ஒர்வேளை ஓர் ஏழைப்பிராமண கிரகத்தில் நுழைந்
... அவ்விடத்து ஒன்றுமில்லா
... வாடி மகானுபாவனுகி
... ய என ...

[illegible]

ட்டு இமயமலை சென்று, ஆங்கு முன்னரே தவஞ்செய்யும் கோவிந்தமுனிவரிடம் கிரமசந்நியாசம் பெற்று, வேதாந்த நூற்களிற் பயின்று, காசிமாநகரிற் சிலகாலம் வாசஞ்செய்து கொண்டு அநாதி உபநிடதங்களுக்கும், ஸ்ரீமத் வேதவியாசமுனிவரருளிய சூத்திரங்களுக்கும் அத்துவிதமதத்தின் கொள்கை கொண்ட பாஷியம் இயற்றி, மாணாக்கர்கள் பலர் சூழ்ந்து பணிவிடைகள் செய்ய ஆனந்தமடைந்திருந்தனர். இங்ஙனம் வசிக்கும் இம்முனிவர்கோமான் மெய்ப்பொருள் விளங்க எழுதிய இந்தப்பாஷியத்தை, வேதவியாசமுநிவர் ஓர் முதிர்ந்த அந்தணர் வேடம்பூண்டு பலவிடங்களிற் பரிசோதித்து சகூவருஷம்நமது தவப்பயனாகக் கொடுத்து,இவ்வித்தையைஎங்கும் ஓங்கித் தழையச்செய்யுட்படி ஆஞ்ஞைசெய்ய, அவ்வாறு அவரது ஆணைக்கிணங்கி, குருமதம் வேற்றுமை புரிந்த பாவத்தையொழிக்க உமி நெருப்பிற் பிரவேசித்த பட்டபாதரைக் கண்டு அவர்க்கு மெஞ்ஞான விளக்கேற்றி, விதபிமாநகரில் மண்டனமிச்சிரரைக்கண்டு அவருடன் வாதுபுரிந்து ஜயித்து, மத்தியஸ்தமாய்நின்ற அவரது மனைவியை ஜயிக்கக் கருதி அவருடன் வாதுபுரிந்து, கலை நூற்களில் அம்மங்கை கேட்கும் கேள்விகளுக்குக் கசடற விடை கொடுக்க சிறிது காலம் யாசித்து, பின்னர் அமருகன்என்னும் அரசனுடலிற் பரகாயப் பிரவேசஞ்செய்து, அங்கு அவனது மனைவிகளுடன் மணந்து மகிழ்ந்தார். பிறகு அவர் மனைவிகளில் ஓர் மங்கைமணி இவரது குணங்களைக்கண்டு ஏதோ ஒரு மகா புருஷர் இங்கு வந்திருக்கிறார் இவரை இவ்வுடலில் நிலைநிறுத்தவேண்டுமெனக் கருதி மந்திரிகளுடன் யோசித்து எங்குமுள்ள பிணங்களைச் சுட்டிட வேலைக்காரர்களுக்குக் கட்டளையிட அவ்வாறே அவர்கள் நடத்திவரும்பொழுது அவ்வாசிரியனுடலும் கண்டு பற்றி கொளுத்த, இதனை மாறுவேடங் கொண்ட தம [illegible] சீஷர்[illegible] றிந்து மறுபடி அவ்வுடலை நீக்கித் தழலிலிட்ட தமதுட[illegible] சிம்மன் திருவருளால் நன்கு பெற்று, அச்சரசவாணி[illegible] னும் மண்டனமிச்சிரர் மனைவியிடம் சென்று அவரை [illegible] லையிலும் வென்று, அம்மண்டனமிச்சிரரைத் துறவியாக்[illegible] வருடன் தென்றிசை நோக்கித் துங்கபத்திரையில் ஓர் [illegible] ஏற்படுத்தி ஆங்கு சரஸ்வதியை ஸ்தாபித்துத் தா[illegible] லகாலம் ஆங்கே கழித்தனர்.

இன்னும் வரும்

[illegible]ங்கள்.

[illegible]

𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌃

𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑌿𑌃

𑌸𑍂𑌚𑌨𑌾𑌃

[illegible]

[illegible]

கோயிற் பூனே தேவருக்கஞ்சுமா!

இப்பூவுலகின் நித்திய கைலாச மென யாவராலும் உத்தேசிக்கப்படும் ஸ்ரீமத் சிதம்பராலய வைபவத்தை யெவ்வாறு யெடுத்துரைப்போம். நிகழப்பெற்ற ஆனித்திருமஞ்சன உற்சவத்தில் நடந்தேறிய கொடிய பாதைகளை, மனப்பக்குவத்துடன் படித்தறியும் பரம பாகவதோத்தமர்கள் மனந்தாளாது கொதிப்புறுவார்களென்பதில்சிறிதும் சந்தேகமில்லை. அநுதி முத்தி சித்தசுவரூபமாய் விளங்கும், ஸ்ரீ நடராஜ பெருமானுடைய இத்திவ்விய மகோற்சவம் நடந்தேறியது மிக அசந்துஷ்டியானதே. தில்லைவாழ் அந்தர்ணகளென்ற திவ்விய நாமம் பெற்றவர்களின் மகத்துவம் இகழ்த்துவமாய்ப் போனதைக்கண்டு ஆறாத்துயர்வடைகிறோம். போதிய கல்வியின்மையின் குணக்கேட்டினால் இவ்வகை செய்ய நேரிட்டதென்பது எமது அபிப்பிராயம். ஒப்புவமையில்லாத திவ்வியகருணாகர மூர்த்தி ஸ்ரீ நடராசபெருமானுக்கும் அபிஷேக நைவேத்தியமில்லாதிருக்க நேரிட்டதென்பதைச் சிந்திக்கையில்எமது கை சோர்வுற்றுத் தளர்கின்றதே! கோயிற் பூனை தேவர்க்கஞ்சாதென்றபடிகி தில்லையின் தீக்ஷிதர்கள் மனோ வாக்கிற்கெட்டாத பரமானந்த மூர்த்தியைத் தங்கள் தஙகள் வீட்டுக் கிள்ளுக்கிரையாய் நினைத்து, சில தினங்களுக்கு திருக்கோயிலைப் பூட்டி தங்கள் கைவசங்கொண்ட பொருள்போல் கட்டிவ் அடக்கினர்களாமே! அந்தோ! இதென்ன விபரீதம். அவ்விருகட்சிக்காரர்களும் மாரோடு மார் கொடுத்துப் போர் புரியினும் ஸ்ரீமத் நடராஜபெருமானுடைய திவ்விய மகோற்சவத்தை இடையூறுபடுத்த இவர்களை ..எவ்வகைப்பற்றிய துணிவு குடிகொண்டது. ஓஜனங்களே, பரம பாகவதர்களே, இந்த அன்னியாய பாத்திய சுவதந்தரத்தை வளர்ப்பது மிகக் கொடியது. தீக்ஷிதர்கள ஒற்றுமையற்றதினால் வரும் இகழ்ச்சியைப் பாருங்கள்? இது நிற்க, இன்னும் சிறிது கேளுங்கள். நமது ஜில்லாவின் கலெக்டர் மிஸ்தர். ஹெச். பி. தார்டன் துரை அவர்களின் பரம தயாள குண சீலத்தைக் கேளுங்கள், ஸ்ரீமத் நடராஜபெருமானுடைய மகோற்சவத்தை தடைப்படுத்துதல் மிகக்கெடுதியெனக் கண்டு, அன்னியதேசத்தராயிருந்தும், மிகச்சிரமம் வகித்து 7-வது திருவிழாமுதல் நடத்தச்செய்து கடவுள்தம் தரிசனகாட்சியைத் தவறுதத்து பரமானந்த பக்தர்களை உஜ்ஜீவிக்கச்செய்தனர்.| இப்பரமோப காரியை நீடுழி வாழ்த்தாது சென்றவர்கள் ஒருவருமில்லை. ஆயினும் தில்லையின் தீட்சதர்களின் இராப்தத்தன்மையைப்பாருங்கள். வருஷாவருஷம் நடந்தே வேண்டிய முறைமைக்கு மாறாக, அநேக தேசாந் திரங்களினின்று வந்திருந்த யாவரும் ஸ்ரீ நடராஜபெருமானின் திவ்விய தரிசனக்காட்சியை|கண்கொண்டு ஆநந்தத்தில் ஆழச்செய்யாது, முறைமைக்கு மாறான காலத்தில் திவ்விய சபைக்கு எழுந்தருளச் செய்து விட்டனர்

இக்கொடிய செய்கைகள் அடுக்குமா, திருத்தொண்டர்களின் மனம் கெடுக்குமா, இக்கொடிய தீக்ஷிதர்களை ஓடுக்குமா நண்பர்களே, பற்பல தேசாந்தரங்களினின்று பெண்பிள்ளை சகிதர்களாய் அநேகர் மெய்சோர வருந்தித்தம் வந்திருந்தனர் களென்பது சொல்லவு

[illegible]

னைவரும் முறைமைப்படி மாலை 3 மணிக்கு தரிசனங்கிடைக்குமென்று உத்தேசித்திருக்க காலை 10 மணிக்கே நடந்தேற்றிவிட்டனர்களே. இதென்ன கொடிய விபரீதம் இத்தீக்ஷிதர்கள் செய்யும் கொடிய அநீதிகளை இனித்தாளமுடியாது ஆனதால் நண்பர்களே, ஆங்காங்கு மகாநாடுகூடுங்கள். தீக்ஷிதர்கள் செய்யும் கொடியபாதகத்தைச் சாடுங்கள் பக்தர்களுக்கு இன்பரசத்தைப் புகட்டுங்கள் கவர்மெண்டாருக்கு இவ்விஷயங்களை சவிஸ்தாரமாய் சாற்றுங்கள் ஸ்ரீமத் சிதம்பராலயத்தை தேவஸ்தானத்துடன் சேர்த்துவிடப்போற்றுங்கள்

பரமானந்தபக்தன்

இங்ஙனம்

தேசாபிமானிப் பத்திரிகை கூறுகின்றது

பத்திராதிபர்க்கு ஓர் அறிவுறுத்தல்.

பத்திராதிபர் வீண் அவதூறான கடிதங்களுக்கு இடந்தரப்படாது. அன்றி அந்தரங்க கடிதங்களை அந்தரங்கமாகவே வைத்திருத்தல் வேண்டும். எவரெவர் எவ்வெவ்விதமாய்ப் பேசினும் பத்திராதிபர் பாரபட்சமின்றி, உண்மையை உரைக்கவேண்டும். நியாயஸ்தலத்திற்குப் பத்திராதிபர் செல்லநேர்ந்துழி அந்தரங்க கடிதக்காரரை எவ்வாற்றானும் காட்டாதொழிந்துகுற்றம்வெளிப்படின் அதன் பயனைப்பெறவேண்டி நேர்ந்தால், தாமே புன்சிரிப்போடு பெறல்வேண்டும். இது பத்திராதிபர்க்கு ஓர் அவஜமாகும். பத்திராதிபராயிருப்பது இலேசான காரியமன்று.

அறிவுறுத்துபவன்.

பத்திரிகை சீர்திருத்தல்.

சென்ற ஜூன் மீ 30உ பிரசுரமான "ப்ரம்ம வித்தியா," பத்திரிகை கிடைத்தது. அதைக்கண்டு களித்தேன். அதில் பற்பல குறைவுகளிருக்கின்றன.

காமா முதலிய குறிகளில்லை. எழுத்துத் தப்புகளிருக்கின்றன, எழுத்து படியாமலிருக்கின்றதோடு, மாறியுமிருக்கிறது. சில எழுத்தைப்புப்சித்தவரெவரோ வறிகிலன் மை படவில்லை. ஓரம் 4- பக்கமும் நேராயிருக்கவில்லை. எழுத்து தலை கீழாகவுமிருக்கிறது. மேல் பார்வையான மஞ்சள் கடிதமே அதன் அழகை வாயில் போனடுக்கொண்டது. இன்னும் பற்பல குறைகளிருக்கின்றன.

விவேகிகளே

இதுசிதம்பரத்தில்நூதனமாயுண்டுபண்ணினதெனத்தெரிகிறது. நாட்டுப்புறம் வேலைக்காரர் கிடைப்பதரிதினும் அரிது இக்குற்றங்களைப்பத்திராதிபர் தெரிந்துகொள்ளாதிரார். [illegible] வருக்கும் மனவருத்தமாகத்தானிருக்கும் இனி, மறுமுறையாவது கூடியமட்டும் சீர் திருத்தம் செய்வாரென, நம்புகின்றனன். விஷயம் நன்றாயிருந்தால் போதுமென வுரைத்தது தகுதியன்று. யாவுமே திருத்தப்படவேண்டும்.

சீர் திருத்தம் நாடுவோன்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

உ

சுபமஸ்து

ப்ரம்மவித்தையென்னும் திருநாமம் பூண்ட தேவிய ரை வணங்கி, அப்பத்திரிகையில், கண்ட கேழ்விகளில் ஒன்றான (பிராமணர்களின் பெண்களுக்கு விவாகம் செய்யக்காலம் எதுவரையிலுள்ளதேன ஸ்மிருதிகளின் கொள்கை) இக்கேழ்விக்கு உத்திரம் கூறுவாம்.

(மனு, மங்கையர்களுக்கு உபநயனத்திற்குபதில் விவாகஞ்செயல் வேண்டுமெனக்கூறினர்) என்று வியாகிரபாத ஸ்மிருதி கூறுதலால் புருஷர்களுக்கு, உபநயனம் எவ்வாறோ அவ்வாறே ஸ்திரீகளுக்கு விவாகம், எனத்துணியப்படுகிறது. அற்றேல் மனு முதலிய ஸ்மிருதி கர்த்தர்கள் விவாக காலம், வெவ்வேறு கூறியது யாது காரணம், அவை உண்மையாயின், உபனயனகாலமேவிவாககாலமென நிச்சயிப்பது எங்ஙனம் ஒவ்வுமெனில், அவ்வசனங்களைக்காட்டி, அவைகட்கு வழி கூறுவாம்.

அவற்றுள் போதாயனர் சொல்வது.

(நற்குணமுள்ள பிரமசாரிக்கு நக்கினிகையைக்கொடுத்தல் வேண்டும். அக்குணங்களுள்ளவர் கிடைக்காமற்போயினும், அப்பெண் ரஜஸ்வலையாவதற்குமுன் குணமில்லாதவனிடமும் கொடுக்கலாம்.)

அங்ஙனமே வசிஷ்டரும்கூறுகின்றனர்.

ருதுவாவதற்கு முன்னே பெண்ணை தானஞ்செய்ய வேண்டும். ருதுவான பெண்ணை வீட்டில் வைத்துக்கொண்டால் தகப்பன் பாவியாவான்.

ஸம்வர்தர் சொல்வது.

வெட்கமில்லாது விளையாடுவது, பசுக்களுடன் எதிர்ப்பது என்னும் இக்குணங்களுள்ள இளமைப்பருவத்தில் விவாகஞ்செயல்வேண்டும். எட்டாவதுவயதுவந்தால்அவள்கவுரியெனவும், ஒன்பதாவது வயதில் ரோகிணி யெனவும், பத்தாவது வயது வந்தால்கன்னியெனவும், அதன்பிறகு ரஜஸ்வலைஎனவும், கூறி, வயதுபன்னிரண்டு சென்றபிறகும், (பெண்ணை விவாகம் செய்து கொடுக்காத தகப்பன், தான்சோணிதபானம் மாசம் ஒரு முறை செய்பவனுக்கொப்பவான் யென்றும், கவுரிதானம் செய்தால் சுவர்க்கமெனவும், ரோகிணியை தானம் செய்தால், வைகுண்டம் ஏகுவான் எனவும், கன்னியைக் கொடுத்தவன் பிரமலோகமடைந்தவன் எனவும், ரஜஸ்வலையைத்தானம் செய்தால் ரௌரவ நரகம் புகுவான் எனவும், அதுகொண்டு, ருதுகாலத்துக்கு முன்னரே பெண்களுக்கு விவாகம் செயல் வேண்டும்) எட்டாவது வயது கன்னிகளின் விவாகத்திற் சிறந்ததெனவும் கூறினர்.

எமனேஇவ்வாறே வேற்றுமைகளைப்பலவாறுரைத்து பிறகு (ஆதல்கொண்டு மாதர் புஷ்பவதிகள் ஆவதற்குமுன்னே விவாகம் செய்ய வேண்டும்)என மொழிந்தார்,

ஆபஸ்தம்பரும்(எட்டுவயதில் கவுரி ஒன்பதில் ரோகிணி பத்தில் கன்னி பிறகுரஜஸ்வலை என்றும், பன்னிரண்டில் விவாகம்செய்வது அரசர்க்குரியது என்று சொல்லுகிறார்.)

அங்ஙனம் மனுவும், (முப்பது வயதுள்ள ஒருவன் பன்னிரண்டு வயதுள்ள பெண்ணை விவாகம் செய்ய வேண்டும்)என

[illegible]

விதிக்கிறார்.

இவ்வாறு வசனங்களை ஆராயின் விவாககாலம் ருதுவாவதற்கு முந்தியகாலமேயெனத்துணியப்பட்டது. அவற்றுள் முக்கியகாலம் எட்டாவது வயது முதல்- பத்தாவது வயது வரையில்" (உபநயன காலம், ஸ்திரீகளுக்கு விவாககாலம்)என்றும்வியாக்கிரபாதர் வசனத்தாலும்(விவாகம், ஸ்திரீகளுக்குஉபநயனம் என்று பிதாமகன் கட்டளையாதலால், கர்ப்பத்தைக்கூட்டி எட்டு, அதாவது ஏழாவது வயது, அல்லது எட்டாவது வயது, கலியாணஞ்செய்ய முக்கியம்.) எனனும்,எமன் வசனத்தினலும் அதுவே சித்தாந்தமாகிறது. அப்பால் பன்னிரண்டு வயது வரையிலும் காலம் உள்ளது,அது அமுக்கியம். (முப்பது வயதுள்ள புருஷன் பன்னிரண்டு வயதுள்ள பெண்ணை மணம்புரிய) மனுவசனம் காணப்படுதலால் பிறகு எவ்விதமும் கூடாதென கருத்து.

இங்ஙனம் கூறிய முக்கிய காலத்துக்குமுன் பெண்களை கன்னியாதானஞ் செய்ய விதிக்கும் விதிகள் (நற்குணங்கள் நிறைந்த ஒருவன் கிடைத்தால் காலத்திற்குமுன்னும் கொடுக்கலாம்) என்று எமன் வசனமிருத்தல் பற்றி ஏதோ ஒரு சமயம் நற்குணங்களுள்ளவன் கிடைக்குமிடத்து ஒவ்வும். அதுகொண்டு ஸ்மிருதிகளையும் பெரியோர் வசனங்களையும் நல்லோர் ஒழுக்கங்களையும், ஆராயும் வழி கலியாணகாலம் பெண்களுக்கு, பத்தாவது அல்லது பன்னிரண்டாவது எனக்[illegible]கிறேன்.

இங்ஙனம்

சிதம்பரம் பச்சயப்பமுதலியார் ஸ்கூல் ஸம்ஸ்கிருத முன்ஷி

திருவெண்காடு

நாராயணசாஸ்திரி

உ

பாதிரியார்க்கும் முன்ஷிக்கும் நடந்த சம்பாஷணை

கடல்சூழ்ந்த இப்பூவுலகின்கண் எண்ணிறந்த மத[illegible]ளிருக்கின்றன என்பது யாவருக்கு மறிந்த விஷயமே. [illegible]வொருமதஸ்தரும் தத்தம் மதமே சிறந்ததெனவும், பய[illegible]டைய தெனவும் கூறி, மற்ற மதஸ்த்தரியம்பும் ம[illegible]களிழிவெனவும், பயனற்றன வெனவும் சொல்கின்றனர்[illegible]ல மதங்களுள்ளும் சிறப்புளது ஒன்று இருக்குமே ய[illegible] யாவுமே அங்ஙனமாகா. ஒவ்வொருவர் கூறும் சி[illegible]தத்தை மற்றவர் பூர்வபக்ஷம் செய்யினும், உண்மை[illegible]ருதி, யுக்தி, அநுபவமுள்ள மதமொன்றேயாகவேண்டு[illegible]ஃதங்ஙனமாக, உயர்வாயமதத்தையும், மற்றவர் [illegible]லிருக்கவில்லை. அற்றாகலின் அவரவர் கூறும் குற்ற[illegible]ம் குற்றமாகா. குற்றமற்ற சான்றோர் பிறர் மத[illegible]ல் உரைக்கும் குற்றம் ஒன்றுமே குற்றமாக முடி[illegible]ம். குற்றமுள்ள மதஸ்தர் தமது குற்றத்தை [illegible]த்தாது பிறர் குற்றத்திலேயே கண்ணுயிருப்பது[illegible] பெருங்குற்றத்தைச் சலனைத்தட்டியால் மூடி[illegible]ற்றத்தின் அணுவைப் பூதக்கண்ணாடியில் விரித்து[illegible]துபோலாம்.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கிறிஸ்தவர், இந்து, பௌத்தர், மகம்மதியர் முதலான மதஸ்தரையும், பௌத்தர், மற்றவரையும், மகம்மதியர், மற்றவரையும், இந்துக்கள், மற்றவரையும், அத்வைதி விசிஷ்டாத்வைதி த்வைதிகளையும், விசிஷ்டாத்வைதி, மற்றவரையும், த்வைதி, மற்றவரையும், வேதாந்தி, சித்தாந்தியையும், சித்தாந்தி, வேதாந்தியையும், சைவன், வைஷ்ணவனையும் வைஷ்ணவன், சைவனையும், சைவன், வீரசைவனையும், வீரசைவன், சைவனையும், இவ்வாறே மற்றவரும் ஒருவரையொருவர் வைது நிந்தித்து வருவதை யறியாதவர் எவருமின்று. இவ்வாறு புரியினும், உண்மையுள்ள மதம் எதுவோ அதை யெவரிகழ்ச்சி செய்யினுமிகழ்ச்சி யாவதொரு போது மின்று.

ஓர் தமிழ் முனிஷி, பாதிரி யொருவர்க்குத்தமிழ் கற்பித்து வரும்போது, அப்பாதிரி, அத்தமிழ் முனிஷியை நோக்கி, அநேக இந்துக்கள் கிறிஸ்து மதமானார்களே, நீர் மாத்திரம் ஏன் ஆகவில்லை. இப்போது கிறிஸ்து மதமாக வேண்டுமென்றழைத்தார். முனிஷி, ஐயா துரையே, உம்மைப்போலவே சைவனும் அழைக்கிறான், வைஷ்ணவனும்அழைக்கிறான் மகம்மதியனும் அழைக்கிறான், சமணனும் அழைக்கிறான், பௌத்தனும் அழைக்கிறான், இன்னும் மற்ற மதஸ்தரும் அழைக்கிறார்கள். எந்த மதத்திற்குச் செல்வது என்றார்.

அதற்குமேல் நடந்தவை.

பாதிரி — அந்த மதமெல்லாம் பொய். அவற்றை நம்பற்க.

முனிஷி — அந்த மதஸ்தரும் அவ்வாறே உரைக்கின்றனர்.

பா - அம்மூடர் பேசும் பேச்சைக்கேளாதொழிக.

மு - அவரவரும் அங்ஙனந்தான் உரைக்கின்றனர்.

பா - கிறிஸ்து வேதம் சத்தியம்.

மு - மற்றவரும் தத்தம் வேதத்தைச் சத்திய வேதமெனவே உரைக்கின்றனர்.

பா - கிறிஸ்து வேதத்தை நம்பினால் மோக்ஷமுண்டாகும். மற்ற வேதங்களை நம்பினால் நரகக்குழியே.

மு - ஐரோப்ப பாதிரியே, மற்ற மதஸ்தரும் இவ்வாறே பேசுகின்றனர்.

பா - அவற்றை நீர் கொள்ள வேண்டாம். என் பேச்சை நம்பும்.

மு - அந்தந்த மதஸ்தரும் இப்படியே சொல்லுகின்றார்கள். யான் எவர் சொல்லைக்கேட்பது ஒருவர்க்கிணங்கினால் மற்றவர்க்கு மனஸ்தாப முண்டாகிறது. என் செய்வேன்.

பா - முனிஷியே, உமக்கு மோக்ஷத்தில், சுகமுற இஷ்டமா நரகத்தில் துக்கிக்க இஷ்டமா.

மு - கருணையுள்ள கனவானே" இப்போது நீர் கேட்டது போலவே மற்றவரும் கேட்கின்றனர்.

பா - சத்திய வேதம் மெய்யான பராபரனாலியற்றப் பட்டது. மற்றவை மனிதராலியற்றப்பட்டன.

மு - ஒவ்வொரு மதஸ்தரும் நீர் உரைத்தவாறே தத்தம் வேதமானது, கடவுளாலியற்றப்பட்டதெனவும், மற்றவர் வேதம் மனிதராலியற்றப்பட்டதெனவும் கூறித்தம்மதத்திற்கே வாருமென்றழைக்கின்றனர்.

பா - யானுரைத்தவாறு மற்றவருரைக்கினும் அது பொருந்தாது. கிறிஸ்து வேதம் நியாயம் நிரம்பியுள்ளது, மற்ற

[illegible]

வேதங்களில் பிபாடமில்லை

மு - உபதேசியாரே அவரவரும் இங்ஙனமேயுரைக்கின்றனர். எவர் மனதையும் திருப்தியுண்டாக்க, ஒருவனால் எங்ஙனமாகும்.

பா - முனிஷி." நான் சொல்வதற்குத்தடை பேசவேண்டாம்.

மு - மற்ற மதஸ்தரும், இவ்வாறு பேசினால் தடை பேசவேண்டாமெனத் தங்களைப்போல் வாயை அடக்குகிறார்கள்.

பா - கிறிஸ்துமத பைபிளைக்காண்பித்து, பாரும் எவ்வளவு நீதி சொல்லியிருக்கிறது.

மு - ஐயாவே மற்ற மதஸ்தரும், தங்கள் தங்கள் வேதங்களை என் முன் கொண்டுவந்து போட்டு, எவ்வளவு நீதிசொல்லியிருக்கிறது பாரும் என்றுரைக்கின்றார்களே, என் செய்வேன்.

பா - கனியை விட்டுக் காயைத்தின்னப்பார்க்கின்றீரோ,

மு - ஒவ்வொருவரும் தத்தம் மதமே கனி யெனவும், மற்ற மதங்கள் காயெனவும், உரைக்கின்றனர்களே

பா - முனிஷி நீர் என்ன சண்டித்தனம் பேசுகிறீர்,

மு - மற்றவரும் நீங்கள் உரைத்தது போல் சண்டித்தனம் பேசுவதாய்ச் சொல்லுகிறார்கள்

பா - நீர் எம்மதத்திற்கு வர மாட்டீரோ.

மு - அவரவரும் இவ்வாறுதான் பேசுகிறார்கள்

பா - முகம் கடுத்துக் கோபத்தோடு நோக்கி, அஞ்ஞானிகளிடத்தில் பேசப்படாதென்றார்.

மு - அந்தந்த மதஸ்தரும் தமது மதத்திற்கு வாராவிடில், தம்மை ஞானிகளாகவும் ஏனைய மதஸ்தரை அஞ்ஞானிகளாகவும், நிர்மானிப்பதோடு பேச்சுக்குப்பேச்சுப் பேசி[illegible] முகம் கடுகடுத்துக்கோபிக்கிறார்கள். ஒவ்வொரு மதஸ்த[illegible] பத்தையும் எவ்வாறு ஆற்றுவேன். எந்த மதத்திற்குச்[illegible] லினும், மற்றவரால் அஞ்ஞானி என்கிற பட்டமே பெ[illegible]ண்டி வருகிறது.

பா - முனிஷி! இனி உ. இஷ்டம்

மு - இவ்விதமாக நான் பேசினால் மற்ற மத[illegible] இவ்வாறு தான் உரைக்கின்றனர்.

பா - மௌனம் சாதித்தார்

மு - அவரவரும் இப்படியே மௌனம் சாதிக்கின்ற[illegible]

பா - எழுந்து போய் விட்டார்

மு - மற்றவரும் இங்ஙனமே எழுந்து போய் விடுகி[illegible]னர்

பாதிரி மிக வெட்கமடைந்து ஏன் இந்த முனிஷியிடத்தில் சிநேகமெனத் தம்மைத் தாமே வெறுத்து இது முதல் இ[illegible]ஷயத்தை சுட்டிப்பேசுவதை ஒழித்தார்

முனிஷி பாதிரியாரிடம் ஜீவிப்பவராதலால், ஜீவன[illegible]ற்குப் பங்க மின்றித் தந்திரமாய்ப் பேசி, பினி யிவ்விஷ[illegible]தை அவர் பேசா வகை செய்து கொண்டனர். இதனா[illegible]வொரு மதஸ்தரும் தந்தம் மதத்தில், சகலமு முன்[illegible]

[illegible]

வும், ஏனையமதங்களில் அவ்வாறில்லை யெ[illegible]
எழுதுவதுமியல்பேயென வெளியாகின்றது[illegible]
அறிஞர் அவரவர் சொல்வதையும் எழுதுவ[illegible]
து, தாம் எம்மதத்துஞ் சாராமல் நடுவு நிலை[illegible]
ருதி யுக்தி அநுபவத்திற் கியைய, விசாரிக்க[illegible]
தி அ[illegible]ந்த மதங்களினுளவு, அந்தந்த மதஸ்தர்[illegible]
ப் பார்த்தாலன்றி வெளிப்படாது. தமது கல்[illegible]
மதங்களினுளவை யறிவோமெனத்தாமே[illegible]
தாக்தம் செய்து பிறரை அவமதித்து, பின்பு, பி[illegible]
திக்கும்போது தாங்கொண்ட கொள்கைக்கு மாறு[illegible]
ரையில் அம்மதத்தின் அர்த்தந்தெரியாது, தாவி[illegible]
அநுதாபப்படுபவருமுண்டு. ஆதலால் அவ்வம்மதங்[illegible]
மையை நிதானமாய் விசாரியாது, புறங்கூறுவது நியா[illegible]
தம்மதம் குற்றமுள்ளதெனச் சுருதி யுக்தி அநுபவங்[illegible]
ந்தும் மனச்சான்றுக்கு, மாறாகத் தம்மதமே மேலெ[illegible]
ற்றவை தாழ்வெனவும், பிரசங்கிப்பது அறிவுடைய[illegible]
ம், நீதியு மன்று.

நியாயம் விரும்புவோன்

உ

சுபமஸ்து

புஸ்தகசாலை

ஐயா கனவான்களே! அன்பர்களே! கொஞ்சம் கவனியுங்[illegible]

இக்காலத்தில் பிறந்து, இங்கிலீஷ் முதலிய பா[illegible] ஷைகளைக்கற்று, அவற்றுள் உள்ள தேசசரித்திரங்களைக் கட[illegible]ந்தவர்க்கு, எளிதில், முற்காலத்தில் நமது தேசம் வெ[illegible]ன்மையான ஸ்திதியை அடைந்திருந்தது, என்பது [illegible] விஷயமே. அதற்குக்காரணம் வடமேற்குத்திசையிலு[illegible]ற்றப்பக்கங்களிலும், உள்ள ஒவ்வொரு ஜாதியரும் தக்க [illegible]கம் கொள்வதற்கு முன்னரே, நமது தேசத்தில் வசித்த [illegible]னங்கள், சீர் திருத்தம் பெற்ற நடவடிக்கைகளையும், கல்வித் திறமையையும், பலவித கைத்தொழில்களையும் சகஜமான ச[illegible]ரீர பலத்தையும், ஓங்கி வளர்ந்த ஒற்றுமைக்கொடியையும், இராசசியம் நிலைபெறவேண்டி தக்க சாஸ்திரங்களையும், பரோ[illegible]பகாரசிந்தனையையும், பாவத்தில் பயத்தையும், ஆத்திகத்[illegible]தையும் அருமையாய்க் காப்பாற்றிவந்தனர் என்பதே. அக்காலத்தவர்கள் தான் ஆசிரியன் குலஞ்சென்று, அரும் பணிவிடைகள் செய்து, போதுமான நுண்ணறிவைப்பெற்று, பிறகு பொருட்களை நன்காராய்ந்து, அவற்றுள் அனைவர்க்கும் இன்றியமையாத பாகங்களை கண்டெடுத்து, காலஞ்செல்லினும் அதின் பயனைக்கல்விமான்கள் அடையக்கருதி, அநேக புஸ்தகங்களாக எழுதி எங்கும் பரவச்செய்து வந்தனர், பிறகு மற்றவரும், அவ்வாறே சான்றோரிடம் கற்று, சிஷ[illegible]களுக்கு நன்குபதேசித்து வந்தனர்.

இங்ஙனமிருக்க. கொஞ்சகாலத்திற்கு முன்னவதரித்த சிலர், இனத்தில் தவளைபோல், தேசாந்திரங்களின் சங்கதி தெரியாது, பிழைப்புக்கென, புலவர் வேடங் கொண்டும், பொ[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ரூமைப்பொருளாற் பொக்ஷேம் ஸிரப்பி
ன்மையே, உசிதம் எனக்கொண்டும், பூர்
குலத்துக்கோடாலியாய் உயர்குலத்தார் எ
வழித்து, வித்தையைத்துலக்கும் விருது
ப்பலவழிகள்கண்டு, களித்து, கமஹர்களை
ம் கெடுத்துவிட்டனர்கள். அவர்களுட்சில
கொண்டு, மற்றவர் குற்றங்களை க்கண்டெ
ட்டி, அதற்கே காலங்கழித்து, மற்றவரைப்படி
ன் மக்களையும் தமது புத்திக்கிணங்கச் செய்து
புகட்டாதவிணுக்குவார். மற்றுஞ்சிலர், மற்ற
வார்எனப்பொறாமைகொண்டு, தன தகுல தன
யைக் காக்கவேண்டி, உயிர் போயினும்ஒரு
ஒருவழி முயன்று ஒருலேலை முடிக்கமாட்டா
மற்றவர் முயற்சியைத் தடுக்க வல்லமை அவர்க
ப்பெரும் பீடைகளை எவ்விதத்திலும் விலக்கி,
ருவன் ஆவலுடன் அவ்வித்தையைக்கற்கமுடல்வா
காலத்துக்குருமணிகள் அவரிடம்செய்யும் கொடு
வு அவ்வளவு எனச்சொல்லமுடியாது, அதாவது
க்காலமும் அம்மனிதன் தன்சேவுகளுகவேண்டி
ர்தகல்வியைப்பங்கிட்டு, அம்மாணுக்கரைப்பற்பல
ய்ய எப்பொழுதும் ஆஞ்ஞாபித்து, இடையில்
ஞ்சமாய் கற்பித்துக்கொண்டு, அவனுடையஜீவ
ம், அவன் மற்றவர் சேவுகளுகவேயிருக்கக்கண்
வார்? இவ்விதம் பல துன்பங்கள் இருப்பினும்
ன் தன் புத்திகொண்ட, மட்டில் படிக்கலாமெ
தேசத்தில் புஸ்தகங்கள் எவ்விதத்திலும் அகப்
தேசத்தில் உள்ள நல்ல கல்விமான்கள் புத்தகங்
ற்றுவது கேட்டதில்லையா. இவர்கள் தங்கள் த
ற் கிடைத்த புத்தகங்களை எங்கேயோ டதுக்கி,
ன், செல்லுக்கள் என்னப்படும் சிலவகைப்புழுக்க
கப்பட்டுச் சிதைந்து, மண்ணில் மறைந்து போகு
ல் பிறர் அவற்றைக்கண்ணுலாவது பார்க்க முடியா
லகத்தில் முதலை வாயிற்போனவன் மீண்டும்
போல் அப்புத்தகங்கள் எவ்விதமாவது பிறர் கண்
ரும்படியானஸ்திதி அவர்களுக்குப்பிற்காலமும்
பாற்ற அவரது வார்சுகள் இருக்கின்றனர்.
ஆராயும்வழி அவரது உள்ளத்தில் உதித்த கருத்
அறிகிலம். நமது முன்னோர்வெகு காலம் உழைத்ததிர்த,
ட்களைக்கொண்டு புஸ்தகங்களை வேண்டியமட்டில் இய
ரே. இவரிப்படி அவற்றால் அவர்அவர் வீட்டின், எவி
னை கிறைப்பவர், அது பயன் படாதென்று அவருக்கு
து. உலகத்தார் அவற்றைக்கற்று சுகம்பெறுவாரெ
வா, அவர்கள் சிரமமெடுத்துக்கொண்டது. ஏனெனில்,
தில் ஒவ்வொருவனும் எல்லா வஸ்துக்களையும் ஆரா
வற்றின் உண்மையை யறிய வல்லவனுகான். என்று
ருவர், ஒவ்வொரு வஸ்து நிலைமையைக் கண்டு, அதற்கே
ரு நூலை இயற்றிவைப்பரேல், பின்னர் அதைப் படிப்
ளிதில் அறிவார். இப்படிப்பட்ட கெட்டகாலத்திலும்

[illegible]

அவ்வித்தையைக் கொண்டு பிழைப்பு இருந்த தாதலால் இக்கொடிய ஆசிரியர்களை யனுசரித் து, எவ்விதத்திலும் புஸ்தகங்களைப்பெற்று படித்து வந்தனர்.

இக்காலத்திலோ, படிப்பவர்கள் அகப்படுவதே அரிதிலும் அரிது. எவ்விதத்திலும் படிப்பவர் மனதுபோனவழி விட்டும், அவரவர் காலத்தை அனுசரித்தும், உடையுணவுகளையும் கொடுத்துப்படிப்பிக்கினும், ஓரிடம் நிற்கார். கிழவன் மடந்தைப் பருவத்து மனைவியையாள்வதுபோல், இச்சிஷ்யரை இக்காலம் ஓரிடம் நிறுத்துவது வெகு கஷ்டமாய் இருக்கிறது எல்லோரும், அறிந்தவிஷயமே. இங்ஙனமிருக்க, எவ்விதத்திலாவது குருக்கள்மார், தனக்கும் சிஷ்யன் உண்டென்பதவருக்கு ஓர் விருதாதலால், அவர்தன் சிஷ்யருக்கு மனம்போனபடி நடந்து, சிலசமயம் அவர் கோபங்கொண்டால், அதை சமாதானப்படுத்துவதே வேலையாக் கொண்டிருக்கிறார்கள். இக்காலத்திலும், சுடுநாட்களில் அவதரித்த பெரியோர்களைப் போல், இக்காலத்தவரும் புஸ்தகங்களைக், கண்டமட்டில் கறையானுக்கிரையாக்கி, மண்ணில் மறைப்பாரேல், நமது மதம் ஜாதி வருணாசிரமம் மற்ற எவ்விஷயமும் எப்படி விர்த்தியாகும்!! குணங்களைக்கண்டு மகிழ்வோர், நமது தற்காலத்தரசராகியமேற்றிசை மன்னவர்செய்யும் வழிகளைக்கண்ணுற்றும்,இனியாவது இப்புஸ்தகங்கள் வெளிவரும்படி, ஒவ்வோரிடங்களிலும் புஸ்தக சாலைகளை ஸ்தாபித்து, ஏன் விர்த்தி செய்யக்கூடாது. எங்கும் நமது பெரியோர் பெயர் விளங்க, அவரவர் இயற்றிய கிரந்தங்களை ஒன்றுசேர்த்து, மேற்படி கிரந்தங்களை அனைவரும் பார்க்கத்தக்க ஏற்பாடு செய்ய வேண்டுவது, அவசியமல்லவா! தற்காலம் ஸம்ஸ்கிருத புத்தகசாலை வைக்கும் ஏற்பாடுகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், மாயூரத்தின் அருகில் திருவாலங்காடு என்கிற கிராமத்தில், சுமார் 2- வருஷ காலமாய் எஸ் வெங்கிட்ராம சாஸ்திரிகள்ஏற்படுத்தி உள்ள (ஸம்ஸ்கிருதபுத்தகசாலையை)கண்டால்நன்கு தெரிந்துகொள்ளலாம். இப்புத்தகசாலைஏற்பட்ட தினம் முதல்,அநேகமாய்பிரதிதினமும், பற்பல பண்டிதர்வந்து, அப்புத்தகசாலையைக்கண்டு, அதில் உள்ள புத்தகங்களைச்சில படித்தும், தங்கள் தங்களுக்கு வேண்டிய விடங்களில் ஒரு புத்தகங்களை உடனுக்குடன் கண்டு களிக்கின்றாரில்லையா! இக்காலத்துக்கு இவ்வழிவிட்டால், வேறு வழியுமுண்டோ! எவ்விதமும் இவ்வழி விட்டு, புத்தகங்களை நன்கு பாதுகாக்கவும், அவைகளை தக்கவர், தற்காலங்களில், படித்தறியச் செய்யவும், அவற்றின் அளவற்ற பெருமையைபெருக்கவும், வேறுவழி கிடைப்பது சிந்தித்துமன்றாது.

ஆதல்கொண்டு பண்டிதர்களே! பலவிடம் சபை கூடுங்கள், நமது தேசத்து வித்தையை நிலைநாட்டுங்கள், அவற்றின் பெருமையை விளக்குங்கள், நன்கு புத்தகசாலைகளை ஆங்காங்கு ஏற்படுத்துங்கள் இப்பொழு நடந்துவரும் புத்தகசாலைகளை, பொருளாலும் புத்தகங்களாலும், பற்பலத்துணைக்கருவிகளாலும், தங்கள் தங்கள் உசிதம்போல், விர்த்திசெய்யுங்கள்

[illegible]

[illegible]

இவ்விதம் செய்வீர்களென்று நம்பி கனவான்களிடம் விநயமாய் இவ்விண்ணப்பம் கொண்டு வந்தனன்.

இங்ஙனம்
ஓர் தமிழன்

தமிழ்ப்புலவர்களுக்கு ஓர் கேழ்வி

திணையிலுயர் திணையைச்சென்றூதன்காலத்
திணையிலாமாந்தரென்றேயும் — நணுகுமுட
லாருயிரைவேறுபடுத்தாயுங்காலெத்திணையாம்
ஆரணமோர்ந்திரறிவிப்பீர்

பாலைந்தென்பீரவற்றுண்பெண்பாலினைக்குறிக்கின்
பாலென்பதுவடிவப்பண்பையன்றே — நூலறிந்தீர்
எத்தைத்துணிந்தீரிதுபாலெனக்குறிக்கக்
கற்றுணர்ந்தீரோகணித்து.

அறிவானன்றூதிணையையன்றவகுத்தீர்
அறியாதுணர்வதனையந்தோ — குறியாமே
யெவ்வாறஃதிணையாயின்றுரைக்கநேர்ந்திட்டீர்
செவ்வேகற்றீரன்றூதேர்ந்து.

பெயர்ப்பொருளைவேறுபடுத்துவதாற்பெற்ற
பெயர்வேற்றுமையாகப்பேசு — மியல்புடையீர்
எப்பொருளும்பணைபுந்தொழிலுமாயெய்வதனுற்
செப்புவதுநீரெத்திறத்து.

அபிமானி

உ

திருப்பாதிரிப்புலியூர் தேசாபிமானி பத்திரிகையில் இலக்க 20- பக்கம் -4- ல்- கண்ட கேழ்விக்குப்பதில்

அக்கேழ்விகளில் அவர்கட்கு எக்காரணம், விரோதம்உ டாயிற்றூ அறிகிலம். நாம் எழுதிய வசனத்தின் பொருள் து. சாஸ்திரங்களில், மூவ்வகைக்கன்மன் காணப்படுவன. அ யாவன. சில சொல்லப்பட்டதும், சில அனுட்டிக்கப்பட்ட ம், சில சொல்லியும், அனுட்டிக்கப்பட்டவும், இவற்றன் ற்கூறியதும், கடைசியில் உள்ளதுமே அனுட்டித்தல் டும். மற்றது கூடாதென்பது அதன் கருத்து. அஃது ணமெனில் தேவர்கள் இருடிகள் இவர்கள் ஓர் காரியஞ் தால், அதையவர் செய்தாரெனக்கொண்டு நாம்செய்யக் து" (அவர்கள் தவப்பலத்தால் பாவத்தை ஒழிப்பவ லால் அவருக்கு அத்தோஷம், கிடையாது எல்லாவற் எரிக்கும் நெருப்பு சுத்தமானதுபோல் என்றறிக) என் கவத வசனத்தாலும் (மகான்கள் தருமத்தைக்கடந்து செய்வதுமுண்டு) என்கிற கௌதமமுனிவர் வசத்தால் வர்கள் சொன்னது செயல்வேண்டும் செய்தது கூட று. கோயில் பூட்டுவதும், சிலர்களின் வழக்கமே வெரு வேனாடக்கும், இவர் இச்சங்கதி யறியாது, லமாய் நடந்தேறிவந்த இப்பூசை இப்பொழுது த டாய்எழுதினூர். அதனடியில் பெண்பால் (ஐக்கியர ன்று கையொப்பங்கண்டு, பெண்கல்வியும், இத்திற தேசத்தில் அடைததென, மிகசந்தோஷத்துட

[illegible] ....-*
[illegible] ....-*
[illegible] ....*
[illegible] ....-*
[illegible] -*
[illegible] -*

(*) [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ணம் எழுதலாலேன்

இங்ஙனம்
சிதம்பரவாசி
சிவதர்மப்பிரியன்

உ

கோளசாஸ்திரிகளுக்கு ஓர்கேழ்வி

ஐயா, தேசாபிமானி யென்கிற பத்திரிகையில், இ[illegible] 22 - பக்கம் 1-ல்பெத்தூர் என்கிற கிராமத்தில் மழை பெ[illegible] பொழுது சிற்சில மீன்கள் உயிருடன் விழுந்து, அவைகளை [illegible]லர் எடுத்து வைத்திருப்பதாய்எழுதியிருக்கக்கண்டோ[illegible]ற்கு முன்னும் திருநெல்வேலி ஜில்லா குலசேகரம்ப[illegible]தில், ஒருதடவை சுமார் ஐந்தாறு வருஷங்களுக்கு மு[illegible]ந்ததாய்கேழ்விப்பட்டோம்! தற்காலத்து ரசாய[illegible]ம், என்று வழங்கும் (சைன்ஸ்) படித்தவரும் ம[illegible]த சாஸ்திரிகளும் இதற்குக்காரணம் என்ன [illegible]ளோ தெரியவில்லை- [illegible]வர்கள் இதற்குத்தக்க கா[illegible]வாரேல், அம்மேதாவி[illegible]க்கு அநேககாலம் நன்[illegible]யிருப்போம்-

பத்திராதிபர்

உ

பத்திராதிபருக்கு ஓர் விண்ணப்பம்

ஐயா பத்திராதிபர்களே! தாங்கள் தயைசெய்து ந[illegible]த்திரிகைக்கு தங்கள் தங்கள் பத்திரிகைகளை, பதில் அ[illegible]வீர்களென்று நம்புகிறேன்- பத்திராதிபர் ஒருவருக்கொ[illegible] உபகாரமாய் இருத்தல் அவருக்கும் பெரும் புகழ்- உல[illegible]க்கும் உபகாரமே-

நமதிடம் தவறுதவரும் திருப்பாதிரிப்புலியூர் தேசாபிம[illegible]ப்பத்திரிகையும் தற்காலம் கிடைக்க வேலூர் ஜனானுகூல[illegible] சுதேசமித்திரனையுங் கண்டு, அப்பத்திராதிபர்களுக்கு ப[illegible]க நன்றியுள்ளவராய் அந்த பத்திரிகைகளும் நமது நாட்டி[illegible] வளர்ந்தோங்கக்கடவுளை பிரார்த்தித்து வருகின்றனம்.

பத்திராதிபர்

உ

பெண் கல்வி

ஐயா

சென்ற ஜுன் மீ 30உ வெளியான பத்திரிகையில், சி[illegible]ற்சிலகேழ்விகள் இருந்தன . அவைகளுள் (பெண்களுக்கு கல்வி பயனுள்ளதோ அங்ஙனமாகில் அவ்விடத்து விதியின் கொள்கை யாது.) என்று ஓர் கேழ்விகண்டு மனங்களித்தேன்- அக்கேள்விக்குப் பதில் என்னைப்போலொத்த ஏழைகள் எழுதத்தகாது- ஆயினும் நாமறிந்தபட்டில் சிலவிஷயங்களை யெடுத்துரைகின் அவற்றினுள்ள குணங்களை, அல்லது குற்றங்களை, மற்றக்கல்விமான்கள்பகுத்துரைப்பாரேல் நாம் நமது அறி

[illegible]

உதி-

[illegible]

[illegible]

வைச்சீர் திருத்திகொள்ளலாம் என்று என் கருத்து.

ஆதலால் இகேழ்விக்கு விடைபகரப்புகுந்தேன்

ஐயா, கல்வியெல்லாச்சுகந்தருமெனவும், கல்வியற்றவன் மிருகங்களுந்சொப்பாவான், அதாவது (மிருகங்களைப்போல் விதிவிலக்கறியான்) என்பது எல்லோருமறிந்தவிஷயமன்றோ. அங்ஙனமாகில், சிறப்பாய்ப் பெண்கள்கல்விக்கு வேறுபயன் இடைக்காது. ஆடவர் படிப்பதற்கு எதுபயனோ அதுவே அவர்களுக்குமென ஏன் சொல்லக்கூடாது. அவர்களுக்கு படிப்பின் பிரயோசனம் ,நல்லறிவு நல்லொழுக்கங்களே அவை அவர்களுக் கின்றியமையாதல்லவா. அங்ஙனமிருக்கச் சிலர்வருமாறு கூறி, பெண்கள் கல்வியைத்தடுத்து வருகிறார்கள். அவை, பொருந்ாதவழி நாம் சொல்வதற்குமுன், அவரது கருத்தை வெளியிட்டுப் பிறகு மறுத்தல், நன்றென்றெண்ணி, முன் அவர் அபிப்பிராயத்தை, வெளியிடுவோம். அவர் கூறுவது.

உலகத்தில் ஆண்பிள்ளைகள் படிப்பதனால் அநேகப்பிரயோஜனமுண்டு. அவை குடும்பத்தை ரக்ஷிப்பது ஒன்றுமாத்திரமல்ல- பற்பல வியாபாரங்கள் செய்யவும், வியவசாயங்கள் கூட்டவும், கைத்தொழில்கள் கற்கவும், மற்றும் அநேக செய்கைகள் செய்யவும், அவர்கள் வலிமை பெறுகின்றாகள் அல்லவா. அங்ஙனமிருக்க. ஓர் குடும்பத்தில் ஆண் பெண் இருவரில்,ஒருவர்படிப்பதுகொண்டே சுகம்பெறக்கூடுமாதலால் குடும்பகாரியங்களுக்கு வேண்டி அவர்கள் படிப்புப் பிரயோஜனப்படுவதில்லை. மற்ற வழியோ ஒருக்காலுங்கிடையாது. ஏனெனில் பெண்களை ரக்ஷிப்பது புருடன் கடைமையாதலால் அவர்கள் படித்து, அவசியம் எவ்விதத்திலும் குடும்பத்தை ரக்ஷிக்கவேண்டியது. இவர்களுச்குத்தலைமைபட்டதுமற்றவர் கடமை ஆதலால் தனது சுகத்துக்குப் படிப்பவசியமில்லை என்பதே. வேறுவேலைகளில் படிப்பை உபயோகிக்கக்கூடுமோவெனில் அது ஒருக்காலும் பொருந்தாது. பெண்களுக்குச்சுதந்திரம் ஒருபொழுதும் கொடுப்பது கூடாதென்று மனு முதலிய மகான்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆதலால் குடும்பகாரியத்தைவிட்டு வேறு எவ்வகைக்காரியங்களும் அவர்கள் செய்வது உசிதமன்று. பின்னும் இருகுலத்திற்கும் பெருங்கெடுதியாகிய நல்லொழுக்கவழுவு,இதில்கிடைக்கும். அஃதெங்ஙனமெனில் பெண்களின் சுபாவம் கெட்டது என்றுமனு எழுதுகிறார். (இவர்கள் அழகு வயது முதலியவற்றில் ஒன்றேனும் கவனிக்கமாட்டார்கள். புருஷனாற்போதும். எவ்வளவாகாற்கினும் புருஷன்களிடம் குரோமாய் இருப்பர். இஃ பெண்களுக்கு அநுதியிலுள்ளது ஆதல்கொண்டு அவர்களை ரக்ஷிப்பது மிகக்கடினம்) அப்படிப்பட்ட சுபாவத்துடன்கல்வி கூடினால், காற்றும் மழையுங்கூடியதுபோல், மிகக்கெடுதல்விக்குமல்லவா. அவர்களுக்கு இளமைப்பருவத்தில் த... முதலியவர்கள் வீட்டில் அவர்கள் செய்யவேண்டிய வே...யைக்கற்பியாது வெளியில் எங்கும் விளையாடித்திரிந்து ...து தோழிப்பெண்களுடன்கூடி, நல்ல ஆடைகளையும் ஆ...ணங்களையும் பூண்டு, கைகளிற் புத்தகம் டலைசகளைக்கொ...டு பற்பல விநோதங்களையும் கண்டு டலவருடம் சிநேகம்...ண்டு, கல்விப்பயிற்சி என்கிற வியாஜத்தினால் எக்கும் திரி...றனர்.

இன்னும் வரும்.

Printed , and Published for the ProPri...r at the BRAHMA VIDYA pres (Chidambaram)